# சட்டத் துறை

## மானியக் கோரிக்கை எண். 33

## அறிவிப்புகள்

## 2021 - 2022

## எஸ். ரகுபதி

சட்டத் துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2021

## 1. சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் புதிய அரசு சட்டக்கல்லூரி துவக்குதல்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில், புதிய அரசு சட்டக்கல்லூரியானது ஐந்தாண்டு மற்றும் மூன்றாண்டு சட்டப்படிப்பில் முதலாமாண்டில் தலா 80 மாணவர்களுடன் 2022 - 2023 - ஆம் கல்வியாண்டில் தொடங்கப்படும்.

## 2. அரசு சட்டக்கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மின்மண்டலம் நிறுவுதல்.

திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக்கல்லூரிகளில் அதிவேக இணைய வசதியுடன் கூடிய கம்பியில்லா மின் மண்டலம் (Wi-Fi Zone) ரூபாய் 30 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

## 3. அரசு சட்டக்கல்லூரிகளில் சர்வதேச பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் சட்ட மாநாடுகள் நடத்துதல்.

தமிழ்நாட்டிலுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதியாண்டு பயிலும் மாணவர்களுக்கு சர்வதேச பயிற்சிப் பட்டறைகள் (Workshops), கருத்தரங்குகள் (Seminars) மற்றும் சட்ட மாநாடுகள் (Conferences) நடத்துவதற்கு ஆண்டுதோறும் ரூபாய் 28 இலட்சம் வழங்கப்படும்.

## 4. அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு ஆங்கிலத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்குதல்.

தமிழ்நாட்டிலுள்ள 14 அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் ஆங்கிலத் திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

## 5. அரசு சட்டக்கல்லூரி உதவிப் பேராசிரியர்களுக்கு ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் மற்றும் புத்தாக்கப் பயிற்சி வழங்குதல்.

அரசு சட்டக் கல்லூரிகளில் பணிபுரியும் உதவிப் பேராசிரியர்கள் சிறந்த முறையில் கல்வி கற்பித்திட ஏதுவாக, ஆசிரிய மேம்பாட்டுத் திட்டம் (Faculty Development Programme) மற்றும் புத்தாக்கப் பயிற்சி (Refresher Course) காலமுறையில் வழங்கப்படும். இச்செலவுகளுக்காக ரூபாய் 14 இலட்சம் வழங்கப்படும்.

## 6. அரசு சட்டக்கல்லூரிகளில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவுதல்.

திருச்சிராப்பள்ளி, கோயமுத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் அரசு சட்டக் கல்லூரிகளில் ரூபாய் 28 இலட்சம் மதிப்பீட்டில் உள்ளரங்கு விளையாட்டுத் திடல் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் நிறுவப்படும்.

## 7. சீர்மிகு சட்டப்பள்ளி வளாகத்தில் 240 கிலோ வாட் (KW) திறனில் சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவுதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் 240 கிலோ வாட் (KW) திறன் கொண்ட சூரிய மின்சக்தி உற்பத்தி நிலையம் நிறுவப்படும்.

## 8. சீர்மிகு சட்டப்பள்ளி வளாகத்தில் செவியுணர் காணொளி ஊடக மையம் நிறுவுதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில் செயல்பட்டு வரும் சீர்மிகு சட்டப் பள்ளியில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் செவியுணர் காணொளி ஊடக மையம் (Audio and Visual Media Centre) நிறுவப்படும்.

## 9. இளங்கலை சட்டப் படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத்திட்டம் அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப் பள்ளியில், இளங்கலை சட்டப்படிப்புகளில் தெரிவுப் பாடமாக தேசிய மாணவர் படைத்திட்டம் (NCC) அறிமுகப்படுத்தப்படும்.

## 10. தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் புதிய பாடப்பிரிவில் முதுகலை சட்டப் படிப்பு அறிமுகப்படுத்துதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில், இணையவெளி, சட்டம் மற்றும் நீதி (Cyber Space, Law and Justice) என்ற புதிய பாடப்பிரிவில் முதுகலை சட்டப் படிப்பு (எல்.எல்.எம்) ரூபாய் 1 கோடியே 18 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

## 11. சட்ட ஆராய்ச்சித் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் துவக்குதல்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வரும் சட்ட ஆராய்ச்சித் துறையின் திறனை சர்வதேச அளவில் மேம்படுத்தும் திட்டம் ரூபாய் 15 இலட்சம் செலவில் தொடங்கப்படும்.

## 12. திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில் புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் நிறுவுதல்.

திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தில், சட்டம் மற்றும் வேளாண்மைக்கான மையம் (Centre for Law & Agriculture) மற்றும் முதலீடுகளுக்கான சட்டங்கள் மையம் (Centre for Investment Laws) ஆகிய இரு புதிய சட்ட ஆராய்ச்சி மையங்கள் (Legal Research Centres) ரூபாய் 20 இலட்சங்கள் செலவில் நிறுவப்படும்.

**எஸ். ரகுபதி**
சட்டத் துறை அமைச்சர்

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.